shipped as Siva. This is denied by none. Latter Sri Ramanuja asserted that it was a mistake and and that the Swami was Vishnu". It is to be noted that Sri Ramanuja it was, who first placed the chank that chakram in the hands of the Deity to clearly make out the identity of the God as Vishnu. The arrangement of the hair 'as jata' or tangled mass, the cobras carved upon the body all point out that the Lord was viewed as Siva. The Dikshadars (who were the priests then) were saivities though they wore namam. A point worthy of note is that the image of Sri Venkateswara from chin upto to the top of the crown to a height of about two feet is roughly cylinderical and is made to resemble a Linga with a crown, a thick white namam in refined camphor starting from the mouth completely hides the nose, eyes and actually covers the whole face leaving the cheeks (round in shape) as lost in the cylindrical form. One view can be that this unshapen dark mass indicates formlessness. The glowing white namam surrounded by the dazzling yellow golden crown, set with brilliants and tapering upwards renders the whole picture as one of a sacrificial flame representing the supreme Effulgence, dinning into the ardent devotee to medidate on the formless Effulgence of the supreme Brahman.

There is further the irrefutable historical visit of Sri AdiSankara to Tirupathy where he erected the crystal Lingam as the image of Venkateswarar and denomitated it as Chandramouleswarar the crescent crowned God. Shri Shankara's purpose was to stress on the fact that the image of Venkateswara combines the aspects of Sakthi, Brahma, Siva and Vishnu. It was the sage's mission to direct posterity to have a Subjective conception

of the Absolute as the only Reality containing with Him all the experience of the Gods and the universe. The very name Venkateswara has a suffix Iswara wich is more than Siva or Vishnu. It is the Absolute ONE. It was indeed Adisankaracharya who innovated agamic worship in Tirupathy for the first time with Brahmin priests. It was Sankara who installed a yantra and Akrasana chakra marne the Padmapitam of the God.

When we come to the devotees of Lord Muruga who ardently feel the imminance of that deity in Sri Venkateswara, one has to admit that all over India particularly in Northern India pilgrims hasten towards Tirupathy crying out for Darshan of 'Balaji' — Balaji is synonymous with Balasubramanya. And in the long travail over the seven hills one hears the resonance and echo of the words 'Balaji' or 'Govinda' from the pilgrims coming over to the shrine from all corners of India. To the ardent Devotee Sri Venkateswara as Govinda or Balaji is the same supreme Almighty protecting erring humanity in this Kaliyuga. The sacred tank 'SvamiPushkarani' cannot but denote a saivite God. Svami is 'Kumaraswamy'. Doctor S. Krishnaswamy Iyengar refers to Balaji as Balakrishna. But there is no Balarama shrine up the Hills as the latter is generally present in Sri Krishna temple at Tiruchanur. The Lovers of Lord Muruga quote the Siva Rahasya kanda of Skandapuranam (Sankara Samhita ch. 48) where it is stated that Venkatachalam is the home of Subramanya. After the Samhara of Tarakasura, Skanda is said to have had a pilgrimage to all shiva shrines as Kedaram, Kasi Virupaksham (Humbi) Kalahasti (Dakshna Kailasam) and finally to his own home Venkata-

chalam. Balaji (young Lord Muruga) being a bachelor Sri Venkateswar being present on the hills without a consort lends support to the Skanda aspect of the God. Again in kandapuranam of Kachiappa Sivachariar (Vazinadai Padalam-stanza 6) it is stated that Muruga came to Vengadam after quarreling with his mother Parvathi. We may here recollect also that the other quarrel with his father Siva in not giving him the Divine fruit in preference to Vinayaka, resulted in Muruga going to Palni Hills.

[To be continued]

Tapovanam Ashram Notes

Tapovanam is the place for Darshan for the numerous Devottees of Swamiji, whose other abode is in Chittilingamadam east of Tirukoilure (5 miles away). Bhajans and religious discourses from time to time at the Tapovanam attract large concourses of Bakthas.

A matter of significant spiritual importance is the sudden meeting of His Holiness Sri Rama Chandra Thirtha Swami (Badiri Sankaracharya Chakatapuri Samasthanam) at Tapovanam with Sri Gnanananda Swamiji on 3—11—1957. His Holiness Sri Ramachandra Thirtha Swamiji had been camping for a week in October 1957 in Tirukoilure giving darshan to asthikas. His poojas inspired the public, His Holiness left for Tiruvannamalai enroute Tapovanam when Sri Gnanananda

Swami was at Chittilingamadam. So on 3—11—57 suddenly making up a decision to meet our Swamiji His Holiness came from Tiruvannamalai at about 3 P. M. The meeting of the two spiritual seers was ever so significant, the matadipathy of Sakatapuram representing the rigorous school of Hindu Sanyasinhood in the Gadi of a mutt, Sri Gnanananda Giri Swamiji, the venerable seer representing the pleasant realised Sanyasin, with no Shackles of Mutt Paripalna. The former was met at the doors of the Tapovanam by the Bhajana Party assembled there along with all asthika shisyas. Sri Gnanananda Giri Swamiji received His Holiness and to the tune of divine music and bhajan chants, the twain proceeded to the heart of Tapovanam where Lord Ganesa presided, cansecrated as he was under the shade of a Mango tree. After mutual Pranams and special offerings to Lord Ganesa, the two seers sat facing each other amidst the cencourse of hundreds of devottees. The Thirupugal Bhajan Party from Tiruvannamalai and the other party from Tirupathur and Villupuram vied with each other in singing the Praise of Lord Muruga, Lord Ayyappa and Radha Krishna. Earlier in the afternoon there had been Religious discourses by Brimhasri Venkatasubbayyar and Brimhasri Sundaresier of Ramanashram. A big congregation had come for the Day's Darshan and the Bikshadar of the day Ramayyar of Tiruvannamalai had made all adequate arrangements for feeding the devottees.

His Holiness of Sakatapura Samasthanam addressed the gathering for a while on Sanatana Dharma and how pleased he was that Devotees had gathered often at the Tapovanam to drink the nectar of the spiritual magnificience of Sri Gnana-

nanda Guru Swamiji whom he had all along longed to see. He felt very happy in having met him. He blessed the entire gathering. Sri Gnanananda Swamiji felicutated His Holiness and impressed upon the assemblage the need for inbibing the advice of His Holiness. It was a matter of great pleasure to him that the Matadipathy Swami shoud have visited the Tapovanam. It all show that they earning of all great souls was the same — to emancipate humanity to its prestine spiritual Glory. In this task, the devottees should do their part. He was praying for the prosperity of spiritual glory of the distinguished Matadipathy amidst them.'

It was indeed a sight to see them again seated together on the cement Bench under the big tree of the Ashram. The twain appeared to the devottees as Lord Iswara and his son Sri Subramanya, two in concept but really ONE. The devotees sang hymns and sangeerthans. The two Swamijis then parted late in the evening. His Holiness of Sakatapuram Samasthanam proceeding towards Arunachala Hills. Elsewhere in this issue we publish the special Message of His Holiness both in Tamil and English.

3—11—1957 பகல் மூன்று மணிக்கு சகடபுரம் சமஸ்தானதிபதி
ஸ்ரீ ராமச்சந்திர தீர்த்தா திருக்கோவலூர் ஞானனந்த தபோவனத்தில்
ஸ்ரீஞானனந்த தேவரை சந்தித்தபோது எடுத்தபடம்.

போட்டோ பாபுஜி ஸ்டுடியோ, விருத்தாசலம்.

அருளுடைச் சுடரே ! அளிந்ததோர் கனியே !
பெருந்திறல் அருந்தவர்க் கரசே !
பொருளுடைக் கலையே ! புகழ்ச்சியைக் கடந்த
போகமே ! யோகத்தின் பொலிவே !
தெருளிடத் தடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே ! சிவபெரு மானே !
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே !

(மாணிக்கவாசகர்)

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. *(ஔவையார்)*

ஸ்ரீ ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகளின்

ஆசி மொழி

ஓங்காரத்தின் உள்ளே ஒப்பற்ற பேரின்ப ஒளி ஒன்று திகழ்கிறது. அவ்வொளிக்குள் அண்டபகிரண்டங்கள் சராசர உயிர்கள், உலக நாம ரூபங்கள் யாவும் இயங்குகின்றன. அவ்வொளி மக்கள் உள்ளத்தில் உயிர் ஒளியாய் நின்று விளங்குகின்றது. இவ்விதம் மக்களின் உள்ளத்தில் ஒளிதரும் உயிர் ஒளி அனாதிகாலமாய்த் தொன்று தொட்டு கால தத்துவம் எனப் பெயருடைய அநிர்வசனீய மாயாவிசிஷ்டனான ஈசனுக்குள் அனாதியான கர்மபரிபாக வசத்தால் பல்வேறு உடல்கள் எடுத்து மாறிமாறிப் பிறவி எய்துகிறது என்பதே சாஸ்திரங்களுடைய கருத்தும் ஆன்றோர்களுடைய அனுபவமுமாகும்.

2. மக்கள் பெற்றுள்ள யாக்கையின் பயன், பிறவிப் பெருங் கடல் கடந்து தங்களது ஸ்வபாவ ஸ்வரூபமான பேரருள் ஒளி வடிவத்தை யடைந்து இன்புற வேண்டுவதே யாகும். வேதங்கள், உபநிஷத்துகள், உண்மையனுபூதி பெற்ற மகர்ஷிகள் இவர்களின் உபதேசமும் இதுவே.

3 ஆகவே, உயிர்கள் தம்முள் உறையும் ஒப்பற்ற அறிவு வடிவமாயுள்ள பேரொளியால் தத்தம் வினைப்பயனுக்கீடாகவே இயங்குகின்றன. இந்த இயக்கத்துக்குக் காரணமாயுள்ள பேரொளியில் மக்களிடையே ஆசை யெனும் பெருங்காற்றடித்து மக்களை மயக்கத்தில் ஆழ்த்துகிறது. இந்த மயக்கத்தால் மக்கள் தம்முள் ஒளிரும் உயிர் ஒளியை மறந்து இருளுற்று உண்மை நிலையுணராமல் துன்புறுகின்றனர். இவ்விருளைப் போக்க ஒரு பேரொளி எனும் வெளிச்சம் இயங்கவேண்டுவது இன்றியமையாததாயிருக்கிறது.

4. கால நிலைமைக்கு ஏற்றபடி இவ்வுலகில் பல்வேறு ஒளிகள் இயங்குகின்றன. எனினும் மக்கள் தம் உயிர் ஒளியை உணரமுடியாமல் மயக்கமுற்றவர்களாகவேயிருக்கின்றனர்.

5. உள் ஒளியை உணர்ந்தாலன்றி மக்களின் மயக்க இருள் ஒழியாது. பிறவிக்கடல் கடந்து பேரின்ப நிலையைப் பெறுவது சாத்தியமில்லை.

6. இந்த லக்ஷியத்தையடையும்பொருட்டு, நம்முள் உதயாஸ்தமன மில்லாமல் ஒரு பேரருள் வடிவமான இயற்கை ஒளி உள்ளது என்பதைக் குறிப்பாய் மக்களுக்கு உணர்த்துவதற்காகவே "**ஞான ஒளி**" எனும் பெயர் அமைத்து ஒரு சஞ்சிகையை மக்களிடையே வெளியிடுவதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

7 இதைக் கண்ணுறும் கற்றோரும் மற்றோரும் இச்சந்தர்ப்பத்தை முற்றும் பயன்படுத்திக்கொண்டு உள்ளென்றும் புறமென்றும் பிரிவில்லாத பேரின்ப வெளியை உணர்ந்து துக்கம் கலவாத அழியாத பேரின்பப் பெருவாழ்வெய்துவார்களாக

ஸ்ரீ பத்ரி பீடாதிபதி ஸ்ரீ தோடகாச்சார்ய பரம்பரை

ஸ்ரீ ராமச்சந்திர தீர்த்த ஸ்வாமிகளின்

உபதேசங்கள்

दुर्लभं त्रयमेवैतद्देवानुग्रहहेतुकम् मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुष संश्रयः॥

இந்த மூன்றுதான் இவ்வுலகில் கிடைத்தற்கரியது ஈசுவரானுக்ரஹம் காரணமாக வந்தமைவது. அது மனிதப் பிறவி, பிறவிக் கட்டினின்று விடுதலை பெறவேண்டுமென்ற விருப்பம், மகாபுருஷ ஸம்சிரயம் என்ற மூன்றுமாகும் என்று ஸ்ரீ சங்கரபகவத் பாதாளுடைய உபதேசம். பாரத பூமியில் பிறவியைப் பெற்றவர்களுக்கு இந்த

உபதேசம் அமோகமாக இருக்கின்றது. நாம் மனுஷிய ஜன்மாவை அடைந்திருக்கிறோம். அது பல கோடி ஜன்ம ஸுக்ருதத்தினால் கிடைத்திருக்கிறது. மற்ற சரீரங்கள் பாபத்தினால் வரும். புண்ணியமில்லாமல் மனுஷிய ஜன்மம் கிடைக்காது. எத்தனையோ பிராணி சரீரங்களைப் பார்க்கிறோம். நாய், பன்றி, பசு, பக்ஷி, கிருமி, கீடம் முதலியவை. இவற்றினால் என்ன பிரயோஜனம்? இக லோக ஸுக ஸாதனமோ, பரலோக ஸுக ஸாதனமோ செய்யமுடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். **अत्युत्कटैः पुण्य पापैरीहैवफलमश्नुते** என்ற நியாயத்தினால் தீவிரமான புண்ணிய கர்மாக்களும் பாப கர்மாக்களும் இவ்வுலகிலேயே பயனைத் தருகின்றன. இந்த மனித சரீரத்தினால் இகபரஸுக ஸாதனங்கள் இரண்டும் செய்து கொள்ளமுடியும் என்று மகாத்மாக்களின் சரித்திரங் களிலிருந்தும் சாஸ்திரங்களி னின்றும் நாம் காண்கிறோம்.

அதிகம் சொல்வானேன்? இவ்வுடல் பெற்ற நாம் புருஷப் பிரயத்னத்தினால் பயங்கரமான ஸம்ஸார ஸமுத் திரத்தைத் தாண்டமுடியும். இதற்குப் பிரத்யக்ஷ திருஷ் டாந்தமாக ஸ்ரீ பகவான் ரமண மஹர்ஷியைப் பார்த்திருக் கிறோம். இப்போது திருக்கோவலூர் தபோவனத்தில் ஸ்ரீ ஞானனந்த ஸ்வாமிகளைப் பார்க்கிறோம, இந்த திருஷ் டாந்தங்களே நமக்குப் போதும்.

நமக்கு மகத்தான புண்யம் காரணமாகக் கிடைத்த இந்த மனித சரீரத்தை வீணாக்காமல் நாம் எல்லோரும் ஸபலமாகச் செய்துகொள்ளவேண்டும். இதை எப்படிச் செய்து கொள்வது என்றால் சாஸ்திர விதிப்படி நித்திய நைமித்திக வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்து சித்த சுத்தி செய்து கொள்ள வேண்டும், பிறகு முமுக்ஷுத்வத்தை (பிறவிக் கட்டிலிருந்து விடுபடவேண்டுமென்று) கோர வேண்டும். முமுக்ஷுத்வம் தானாக வராது. அதற்கு மகாத்மாக்களின் ஸங்கமும் அனுக்ரஹமும் வேண்டும். இதற்கு ஸத்குரு ஆசிரயம் வேண்டும்.

शान्तामहान्तोनिवसान्तिसन्तोवसन्तवल्लोकहीतं चरन्तः तीर्णाः स्वयंभीम भवार्णवं जनानहेतुनाऽन्यानपितारयन्तः॥

சாந்தாளான — மகாத்மாக்களான ஸாதுக்கள் இருக்கவேயிருக்கிறார்கள். வஸந்த காலம்போல் லோகத்திற்கு ஹிதத்தைச் செய்துகொண்டு ஸஞ்சரிக்கிறார்கள். தாங்கள் பயங்கரமான பிறவிக் கடலைத் தாண்டி விட்டவர்களாய்க் கைம்மாறு ஒன்றும் கருதாமல் மற்றவர்களையும் பிறவிக் கடலைக் கடக்கச் செய்கின்றனர்.

அவசியம் ஸத்குரு ஆசிரயம் செய்தால் சிஷ்யர்களின் ஹிருதயத்திலுள்ள தாபம் நிச்சயம் நீங்கும். ஆனால் இந்தக் காலத்தில் இம்மாதிரி குரு கிடைப்பாரா என்று சந்தேகிக்கலாம். அந்தச் சந்தேகம் தேவையில்லை. குரு நிச்சயம் கிடைப்பார். நமக்குப் பக்தி மாத்திரம் தேவை. பிரபஞ்ச வாழ்க்கையில் சற்றேனும் ஸுகமில்லை. துக்கம் தானிருக்கிறது என்பதை உணரவேண்டும்.

இப்படிப்பட்ட ஸத்குரு திருக்கோவலூரில் தக்ஷிண பினாகினியின் உத்தர தீரத்தில் அமைந்துள்ள தபோவனத்தில் இப்போது பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்.

नमोऽस्तुगुरुनाथायशिष्यहृत्तापहारिणे।
अज्ञानध्वान्तदीपायश्रितकल्पद्रुमायते॥

சிஷ்யர்களின் ஹிருதயத்திலுள்ள தாபத்தைப் போக்குபவராயும் அஞ்ஞான இருளுக்குச் சத்ருவாயும் ஆசிரிதர்களுக்குக் கல்பவிருக்ஷமாயுமிருக்கும் குருநாதனை தங்களுக்கு நமஸ்காரம். இந்த சுலோகத்தைச் சரணாகதி மந்த்ரமாகச் சொல்லிக்கொண்டு ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிகளை ஆசிரயித்து ஜீவகோடிகள் உஜ்ஜீவிப்பார்களாக என்று ஆசீர்வதிக்கிறோம்.

மக்கள் அமைதிபெற

நம் நாட்டில் ஏழ்மை அகலவேண்டும். எல்லா மக்களும் சுகத்தை அடையவேண்டும். எந்நிலையிலும் மக்கள் தர்மத்திலிருந்து விலகலாகாது. கடவுள் நம்பிக்கையுடன் இருந்தால்தான் மனச்சாந்தியுடன் வாழலாம். சாந்தியில்லாவிட்டால் பேராசை உண்டாகும். பேராசையினால்தான் உலகில் சண்டைகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன.

மனிதனின் —
அடிப்படையான ஸ்வபாவம்
தெய்வத்தன்மையே —

•

மனிதன் தன் அடிப்படையான ஸ்வபாவத்தில், தேகமல்ல, மனமுமல்ல, இந்திரியங்களுமல்ல, ஆனால் அவன் பிறவாத, இறவாத நித்யமான, அழிவில்லாத சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவாக இருக்கிறான். பிரபஞ்சமனைத்துக்கும் அதிஷ்டானமாயுள்ள ஆண்டவனாகிற பரமாத்ம ஜ்யோதியில் மனித வர்க்கமனைத்தும் இயங்கி உயிர் வாழ்கிறது. ஆகவே, ஒவ்வொரு மனிதனும் இந்த ஆத்ம ப்ரக்ஞையுடையவனே. ஆனால் அவன் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும்வரையில் இந்த ப்ரக்ஞை விளக்கமுற்று வேலை செய்வதில்லை. அந்தத் தலைசிறந்த சக்தி காரணமாகக் காற்று வீசுகிறது. ஸூர்யனும் சந்திரனும் நக்ஷத்ரங்களும் அந்தப் பரமாத்மாவிடம் ஒளிபெற்று மிளிர்கின்றன. ஏன்! பிராணிதோறும் ஸ்புரிக்கும் ஜீவ சக்தி, மரங்கள்தோறும், புதர்கள்தோறும், செடிகள் தோறும், பூக்கும் மலர்கள், பச்சைப் புல் முதலியவற்றில் விழும் சின்னஞ் சிறு பனித்துளிகள் இவைகளெல்லாம் அந்த நிகரிலாத தெய்வ சக்தியின் வெளிப்படையான விளக்கங்களேயாகும்.

இந்தப் பரமாத்ம தத்துவத்தைப் பற்றிய அறியாமையே மனிதன் இவ்வுலகத்தில் படும் வேதனைகளுக்கும் வருத்தங்களுக்கும் மூல காரணமாகும். அவன் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறான். ஆனால் தன்னுடைய அடிப்படையான ஸ்வபாவமாகத்தன்னுள்ளே ஆத்மாவை உணரும்வரையில் துன்புற

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதி, ஹ்ருஷீகேசம்.

[ஆங்கிலக் கட்டுரையின் தமிழனுவாதம்]

வேண்டியிருக்கிறது. இனியும் துன்பமே எய்துவான் அவனுடைய உண்மையான ஆத்மஸ்வபாவம் ஆனந்தம்—நித்யானந்தமே "சாந்தோயமாத்மா" கேவலம் ஸச்சிதானந்தமே. ஆகவே, தான் அடிப்படையாகப் பரமாத்மஸ்வரூபமே என்ற உண்மையை உணர்ந்த நிமிஷமே அவன் பரப்ரம்ஹமமாக பரமானந்த ஸ்வரூபமாக ஆகிவிடுகிறுன். தன்னுடையவும் பிரபஞ்சத்திலுள்ள ஸகல பிராணிவர்க்கங்களுடையவும் தினசரிப் பிரவ்ருத்திகளை நிர்வகித்து நடத்தும் பரமாத்மாவின் ஸர்வ சக்தியை, இந்த மேலான ப்ரக்ஞையின் உதயம் அவனுக்கு உணர்த்துகிறது.

மனிதனுள் விளங்கும் ஆத்மாவான ஜீவன் ப்ரம்ஹமமே பரமாத்மாவே, "ஜீவோ ப்ரஹ்மைவநாபர:" என்று உபநிஷத்துகள் ஒப்பற்ற திருவாக்குகளால் உத்கோஷிக்கின்றன. ஆனல் உலகில் மதி மயங்கிய மனிதன் தன்னை உடலோடும் உள்ளத்தோடும், இந்திரியங்களோடும் அபேதமாக உணர்ந்து துன்பத்தில் சிக்கிக்கொள்ளுகிறுன். இந்த மதி மயக்கம் அவித்யை அல்லது அறியாமையில் இருந்து உண்டாகிறது. ஆனல் உள்ளம் தூய்மையாகித் தெளிவடையும் போது உண்மையறிவினல் இவ்வறியாமையை வென்றுவிடலாம். தேகம், மனம், இந்திரியங்கள் இவற்றின் வரையறைகளைக் கடந்துப் பரமானந்தத்தில் திளைத்துப் பரிபூர்ணத்தில் ஆழ்ந்து கிடக்கும் அனுபவத்தை அவ்வித உண்மைவுணர்வு பெற்ற புராதன ரிஷிகள் அடைந்தேயிருந்தனர். அப்படி எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு பரமானந்த நிலை உண்மையில் இருக்கிறது. அதை மனிதன் அனுபவிக்கலாம் என்பதைச் சாதாரண மனிதன் (ஸ்வப்னமற்ற) நல்ல நித்திரையில் பெறும் அனுபவம் நிரூபிக்கிறது. ஸுஷுப்தி நிலையில் அவனுக்கென ஒரு பொருளுமில்லை பிரபஞ்சம் தன்னிடமுள்ள பல்வேறு பொருள்களுடன் அவனைவிட்டு மறைந்து போகிறது. அந்நிலையில், தன் தேகம், மனம், இந்திரியங்கள் ஒன்றையும் அவன் உணர்வதில்லை. எனினும், அவனிடத்திலுள்ள "அஹம்" மாத்திரம் தொடர்ந்து நிற்கிறது. ஏனெனில், மறுநாட் காலையில் "சென்ற இரவு நன்ருய்த் தூங்கினேன்" என்று அவன் தெரிவிக்க முடிகிறது இந்த "அஹம்",

"நான்"தான் உண்மையான நான்; காலதேசங்களின் கட்டுக்கடங்காத ஆத்ம ஸ்வரூபம் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி (நனவு, கனவு, தூக்கம்) என்ற மூன்று நிலைகளிலும் இந்த 'நான்' தொடர்ந்து நிலை நிற்கிறது.

சாதாரண மனிதன் ஸுஷுப்தி நிலையில் இவ்வித மேலான பிரக்ஞையைத் தினந்தோறும் அனுபவித்துவருகிறனெனினும், அக்காலத்தில் அவனுக்கு இந்தப் பிரக்ஞையைப்பற்றிய உணர்வு இல்லை. ஆனால் சென்ற இரவு நன்ருய்த் தூங்கினதாக ஞாபகப்படுத்திக் கொள்ள மாத்திரம் அவனுக்கு முடிகிறது. ஆயினும், அவ்வித அனுபவத்திற்கு அடிப்படையாகவுள்ள உண்மையைப் பகுத்து ஆராய்வதற்கு அவன் அக்கரை கொள்வானுயின், அப்படிப்பட்ட ஆனந்த நிலையொன்று உண்மையிலிருப்பதை அவன் நம்பமுடியும். அதைத்தான் அவன் ஸுஷுப்தியில் சிறிது பொழுது அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிருந்தான். தங்கள் சமாதி நிலையில் இவ்வித துக்கம் கலவாத ஆனந்தத்தை இடையருமல் அனுபவிக்கும் ஓர் நிலையை நம்முடைய புராதன ரிஷிகள் அடைய முடிந்தது. இவர்களுக்கு அந்த பிரம்ஹானந்தைப்பற்றிய பூர்ணப் பிரக்ஞையிருந்தது. சாஸ்திரங்கள் உபதேசிக்கும் மார்க்கத்தை மாத்திரம் கடைப்பிடித்து ஒழுகுவானுல், புராதன மகரிஷிகளுக்கு எது சாத்தியமாகயிருந்ததோ, அது உலகிலுள்ள சாதாரண மனிதனுக்கும் சாத்தியமே.

முதன் முதலில் இந்த உண்மையை அடைந்து அனுபவிக்க வேண்டுமென்று மனிதனுக்குப் பேராவல் பிறக்க வேண்டும் பிறகு தன் உண்மை ஸ்வரூப ஸ்வபாவத்தை விசாரித்து அறியும்பொருட்டு அக்கரை கொள்ளவேண்டும். தன் ஸ்வரூபத்தை விசாரித்து ஆராய்வது சுலபமான காரியமல்ல. மனதையும் இந்திரியங்களையும் சப்தாதி விஷயங்களினின்றும் திருப்பி மனதை உள்முகமாகச் செலுத்தி வெளியுலகத்தினின்று தன்னைப் பிரித்துக்கொள்வதற்கு அசாதாரணமான மனோபலமும் உறுதியும் மனிதனுக்கு மிக்க அவசியம். இதையே வேறு வார்த்தைகளில் சொல்வோமானல் இந்த விசாரணை சாதாரண உலக

வாழ்க்கையில் போல வெளியே செய்வதன்று. தன்னுள்ளேயே நடைபெற வேண்டும். இம்முயற்சியில் வெற்றி பெறும்பொருட்டுத் தனித்து ஏகாந்தத்தில் வசித்து ஸத் விசாரம் செய்வதன் மூலம் வெளி விஷயங்களிலிருந்து பிரிந்து நிற்கும்படி மனதைப் பழக்க வேண்டி யிருக்கிறது. ஏகாந்தத்தில் தனித்திருத்தல் சாதகனின், மனத்தை விகாரப் படுத்தும் விஷயங்களினின்று அப்புறப்படுத்தி வைத்து ஸத்விசாரத்திற்கு வழி கோலும் அவ்வித ஸத் விசாரம், மனதில் சதா ஊறிக்கொண்டிருக்கும் பிரதி கூலமான எண்ணங்களேயும் உணர்ச்சிகளேயும் அடியோடு அழித்து மனதிற்கு உத்தமமான அமைதியை நல்கும்.

மனம் குவியவும் தியானிக்கவும் பழகும்பொருட்டு அமைதியான மனம் முதலில் மிக்க அவசியமாகும் குவிந்த மனமும் அதனுல் நிலேக்கும் தியானமும்தான் சமாதியை நல்கும். ஒருவன் உத்தம மான ஞான ஜ்யோதியையும் ஆனந்தத்தையும் அனுபவிப்பது சமாதி நிலேயில்தான். வேறு எந்த ஸாதன முறைகளும் கூட இந்த நிலேயில் கொண்டு சேர்க்கும். அதாவது பகவத் பக்தி தன்னலம் பாராட்டாத தொண்டு, சாஸ்திரங்களேப் படித்தறிந்து சிந்தனே செய்தல் என்ற இவைகளும் ஸ்வரூப ஸாக்ஷாத் கார லக்ஷியத்தில் கொண்டு சேர்க்கும். எல்லா நிகழ்ச்சி களிலும், பாரமார்த்திக உண்மையானது ஸச்சிதானந்த ஸ்வரூபமாக மனிதனுடைய ஆத்மாவாக யிருக்கிறது: மனிதன் உண்மையில் கடவுளாகவே இருக்கிருன் என்ற தத்துவம் அனுபவத்திற்கு வருகிறது. ஒவ்வொருவரும் இந்த உண்மையை அனுபவிக்க முடியுமாகையால் எல்லோரும் இப்பிறப்பிலேயே இந்த லக்ஷியத்தைபடைய முயற்சிக்கவேண்டும்.

பிறவிப் பயன்

உடம்பினேப் பெற்ற பயனுவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனேக் காண்.

(ஔவைக் குறள்)

பகவத் சரணுகதி

(ஆண்டவனிடம் அடைக்கலம்)

ஸ்ரீ சுவாமி ராமதாஸ்,
ஆனந்தாச்ரமம்.

வாழ்க்கையில் நமக்கு நேரும் சந்தர்ப்பங்கள் எப்பொழுதும் தெய்வ சக்தியின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. ஆதலால் நாம் சாந்தி நிறைந்த — திருப்தி நிறைந்த வாழ்வு வாழ விரும்பினுல், ஒவ்வொருவரும் அத்தெய்வ சக்தியின் நியதிக்கு அடங்கி நடக்கவேண்டும். அச்சக்தி நமக்கு எதைச் செய்தாலும் அது நம்முடைய விசேஷ நன்மையின் பொருட்டேயாகும் என்று நாம் கருத வேண்டும்.

வாழ்க்கையில் எந்நிலையிலும் பிரதிகூலம் நேர்ந்தபோதும் அநுகூலம் நேர்ந்தபோதும் இவ்வுறுதியைக் கைக்கொள்ளவேண்டும். நமக்குப் பிரதிகூலங்கள் நேரும்போது, அருளே உருவமாய் உள்ள ஆண்டவன் நம் நன்மையின் பொருட்டு இப்படிச் செய்திருக்கிருன் என்று நம்பமுடியாதென்பது உண்மையே. ஆனுல், காலக் கிரமத்தில் சரணுகதி உறுதி அடைய அடைய பரமேசுவரனுடைய நியதியே எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறது. அது மனிதன், பிரபஞ்சம் இவற்றின் பரம க்ஷேமத்திற்காகவே வேலை செய்கிறதென்ற அனுபவம் நமக்கு முடிவாக வந்தேதீரும்.

உண்மையான ஆனந்தமே நம்முடைய அழிவில்லாத ஆத்மாவின் ஸ்வரூபமாகும். நமக்குள்ளே இலங்கும் இவ்வானந்தம் வேறுபாடில்லாதது, எப்போதுமுள்ளது. இவ்வானந்தக் கடலின் மேற்பரப்பில் பிரக்ருதி அல்லது இயற்கையின் விலாசம் நடைபெறுகிறது. இயற்கை தன் சக்திகளைக் கொண்டு இயங்கும்போது சில சமயங்களில் சக்திகள் ஒன்றுக்கொன்று மோதுதல் காரணமாக பல துன்பங்கள் நேரத்தான்செய்யும். ஆனுல் இவையெல்லாம்

மேற்பரப்பிலே தோன்றும் ஒரு அசைவே. இவற்றை யெல்லாம் தாங்கிக்கொண்டு ஆதாரமாயுள்ள பரதத்துவம் — பரமானந்த சமுத்திரம் எதனுலும் பாதிக்கப்படாமல் பரிசுத்தமாய், பரம சாந்த ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கிறது.

நமக்குள்ளே விளங்கும் இவ்வுண்மை நிலேயை இடை யருது சிந்தித்து அதோடு ஒன்ருகி நிற்பதே கலக்கமும் குழப்பமும் நிறைந்த இந்தப் பிரபஞ்ச வாழ்விலிருந்து வெளியேறும் மார்க்கமாகும்.

உன்னுள்ளே இந்தப் பரமானந்த ஸ்வரூபம் விளங்கு வதைத் கணப்பொழுதுகூட மறவாமல் உணர்ந்து கொண்டே வாழ்க்கையில் உனக்கென அமையும் எல்லா வற்றையும் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் அமைதியுடனும் செய்வாயாக.

[ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பு]

உ

ஸ்ரீ ஞானந்த தபோவனம்

(ஸஜ்ஜன சரணதூளி — கீழையூர் — திருக்கோவலூர்)

திருக்கைலாயத்தில் ஸ்ரீ பரமேசுவரனைத் தரிசிக்க பிரம்ஹ தேவருடைய மானஸ புத்திரர்களான ஸனகர், ஸநந்த னர், ஸநத்குமாரர், ஸனத்ஸுஜாதர் இந்நால்வரும் ஒரு சமயம் சென்றனர். இவர்கள் ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தியின் தலேசிறந்து விளங்கும் சிஷ்யர்கள். இவர்களே நந்தி தேவர் தடுத்தார் ஸநகாதிகளின் சாபத்தால் நந்தி. ஸ்ரீ கௌரி தேவி தவம்செய்த குடகு மலேயைச் சார்ந்து சிவபெரு மானேக் குறித்துத் தவம்செய்தார். ஸ்ரீ பரமேசுவரன் பார்வதியுடன் காட்சியளித்துத் தம் ஜடா பாரத்தில்

விளங்கும் கங்கையைத் தன் பிநாகம் என்ற வில்லினல் நந்தி தேவரின் சிரஸில் சொரிந்து அவருடையதவத்தீயைத் தணித்தனர். அது ஓர் மகாநதியாகப் பெருகிற்று. இதையே பிநாகினி என்றும் பெண்ணை நதியென்றும் புராணங்களும் புலவர்களும் போற்றுகின்றனர். இம்மகா நதி உத்தர பிநாகினியென்றும், தக்ஷிண பிநாகினியென்றும் இரண்டு நதிகளாகப் பிரவகித்தது. நந்திதேவர் தவம் செய்த காரணத்தால் இந்நதியின் உற்பத்தி ஸ்தானத் திற்கு நந்திதுர்க்கம் எனப் பெயர் வந்தது. பகீரத மகாராஜனின் தவம் காரணமாக இவ்வுலகிற்குப் பரமேசு வரன் ஜடா பாரத்திலிருந்து அனுக்கிரகிக்கப்பட்ட கங்கைக்கு எவ்விதம் பாகீரதி என்ற பெயர் வந்ததோ அப்படியே பரமனின் ஜடா பாரத்திலிருந்து பிநாகத்தின் மூலம் அருளப்பட்ட இதற்குப் பிநாகினி எனப் பெயர் வந்தது ஆனதுபற்றி இந்நதி தக்ஷிண கங்கையாகும். மேலும், இது நினைக்க முத்திதரும் ஸ்ரீ அருணசல க்ஷேத் திரத்திற்கு க்ஷேத்திர நதியாகவும் பிரகாசித்துத் தன் தீர்த்தத்தைச் சிரத்தா பக்தியுடன் சேவிப்பவர்களுக்கு அதி கோரமான ரோகங்களையும் பாதகங்களையும் போக்கி, ஆயுராரோக்கிய ஐசுவரியங்களைத் தந்து முடிவில் பரம பதத்தையும் அளிக்க வல்லதாயிருக்கிறதென்று சாஸ் திரங்கள் உத்கோஷிக்கின்றன.

இவ்விதப் பெருமை வாய்ந்த புண்ணிய நதியின் தென் கரையில் அழியாப் புகழ்வாய்ந்த மார்க்கண்டேயரின் தந்தை மிருகண்டு முனிவரின் பல்லாயிர வருஷத் தவத் திற்கு மகிழ்ந்து அருள்பாலித்து ஓங்கி உலகளந்த உத்தம னய் காட்சியளித்த பெருமான் திருக்கோயில் உயர்ந்த கோபுரங்களுடன் விளங்குகிறது. இது இந்நிகழ்ச்சிக்கு முன்னமேயே ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரமாக இருந்தது. முதல் மூன்று ஆழ்வார்களாலும் திருமங்கை மன்னனலும் மங்களாசாஸனம் பெற்று விசிஷ்டாத்வைத ஆச்சாரிய ரான ஸ்ரீ வேதாந்த தேசிகராலும் இது பாடப்பெற் றுள்ளது.

அதே தென்கரையில் கீழ்த்திசையில் ஸ்ரீ பரமேசுவரன் அந்தகாஸுரனுடைய அட்டகாசத்தை அடக்கி வீராட்ட

ஹாலேசுவரனுய்க் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள க்ஷேத்திரம் பிரகாசிக்கிறது. அஷ்ட வீரட்டானங்களில் இது ஒன்ருகும். இது தமிழ் நாட்டு ஞானத் தாயான ஔவைப் பெருமாட்டிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான் அருள் பாலித்த இடம். பாரி வள்ளலின் பெண்கள் அங்கவை, சங்கவை தெய்வீக மகாராஜனை ஔவைப் பிராட்டியின் பிரார்த்தனைக் கிணங்கி விநாயகப்பெருமான் மணக்கும்படி அருளிய ஸ்தலம். இத்திருமணத்திற்கு வந்த தேவர்கள் தங்கியிருந்த இடம் தேவனூர் என்றும், மணம் நடைபெற்ற இடம் மணம்பூண்டி என்றும் இன்றும் ஊர்கள் விளங்குகின்றன. அப்பர் பெருமானும் ஞானசம்பந்தப் பெருமானும் பாடியுள்ள க்ஷேத்திரம் இது. ஸ்ரீ சுந்தரர் இதை வேறு ஸ்தலத்தில் வைத்துப் பாடியுள்ளார். மேற்கண்ட திருமணத்தில் நடைபெற்ற அன்ன தானத்திற்காக அரிசியாகவே விளைந்த ஊர், விளந்தையென்ற கிராமமாகும். ஔவையார் பாடலுக்கு மகிழ்ந்து இப்பெண்ணை நதியில் நெய், பால் பிரவாகமாய் ஓடிற்றும்.

நதியின் வட கரையில் (அறையணிநல்லூர்) பாறை மீதில் அமைந்து கண்ணைக் கவரும் காட்சியளிக்கிறது. ஸ்ரீ சௌந்தரிய கனகாம்பிகை சமேத ஸ்ரீ அதுல்ய நாதேசுவரரின் சந்நிதானம். இது பஞ்ச பாண்டவாள் வனவாச காலத்தில் சில காலம் தங்கியிருந்த இடம். ஸ்ரீ ஞான சம்பந்தப் பெருமானல் பாடப்பெற்றது. உலகமனைத்திலும் அழியாப் புகழ்பெற்ற திருவண்ணுமலை ஸ்ரீபகவான் ரமண மகர்ஷிக்கு ஜ்யோதிர்த் தரிசனமான க்ஷேத்திரம்.

அதே வடகரையில் மேற்கே சிறிது தூரத்தில் சேவிப்பவர்களுக்கெல்லாம் சிந்தாமணியாய் விளங்கும் ஸ்ரீரகூத்தமதீர்த்த ஸ்வாமியின் பிருந்தாவனம் விளங்குகிறது வருஷம் முழுமையும் யாத்ரிகர்கள் பல்வேறிடங்களிலிருந்து வந்து இதைச் சேவித்துத் தங்கள் மனோரதங்கள் நிறைவேறப்பெற்று வீடு செல்வது உலகறிந்த விஷயம். இப்பால் சிலநாட்களாய், ஸ்ரீ திரிவிக்ரம சந்நிதானத்தில் தெப்பக்குளக் கரையில் ஸ்ரீ ஸ்ரீமந்த்ராலய ஸ்ரீராகவேந்திர பிருந்தாவனத்தின் மிருத்திகையைக் கொண்டு பிருந்தாவனம் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பக்தி சிரத்தையுடன்

சேவிக்கப்படுகிறது. இந்த பிருந்தாவனம் ஆசிரிதகல்ப தருவாகப் பிரகாசிக்கிறது.

இவ்விதம் தபோதனர்களின் தவத்தின் நிலையமாயும் தவத்தினல் ஆராதிக்கப்பட்ட ஆண்டவனின் திவ்ய க்ஷேத் திரங்களாயும் விளங்கும் இந்த திவ்ய தேசத்தில் பிஞகினி யின் வட கரையில் திருக்கோவலூர் இருப்புப் பாதை நில யத்திலிருந்து திருவண்ணமலை போகும் பாதையில் ஸ்ரீ ரகூத்தமஸ்வாமி பிருந்தாவனத்திற்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் விளங்குகிறது, இந்த ஸ்ரீ ஞானனந்த தபோவனம். இதற்கு வடமேற்கில் ஸ்ரீ பரமேசுவரன் 'ஸ்ரீ அருணசலம்' என்ற மலை வடிவமாக, ஞானவிக்ரக மாகத் தரிசனம் தந்து கொண்டிருக்கிருர்.

இவ்விதப் பெருமை இயற்கையிலேயே வாய்ந்த இந்த தபோவனத்தில் ச்ரோத்ரேந்திரியகோசரமாயுள்ள 'சாந்தம் சிவம்' என்ற உபநிஷத்தின் திருவாக்கும், 'அன்பே சிவம்' என்ற திருமூலர் திருவாக்கும் நேத்ரோத்ஸவமாக அன்பும் சாந்தியுமாக வடிவெடுத்து ஸ்ரீ ஞானனந்தகிரி என்ற திருநாமத்துடன் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

அன்னியமே தோன்ருத அகண்டாகார
அறிவுதனை அடைந்தவனே முக்தனேன்
இன்னவிதம் அகண்டபர ஞான முற்றேன்
இவ்வுலகில் எவ்விடத்தும் அரியனவான்
உன்னவொணப் பலகோடி சீவருக்குள்
உரமான ஞானமுளோன் ஒருவன் தானே
அன்னவனைத் தரிசித்த மாத்திரத்தால்
அறமேலாய் அகமெல்லாம் அழியுமன்றே

திடஞானி தரிசனமே தீர்த்த மாடல்.
திடஞானி தரிசனமே தேவ பூஜை.
திடஞானி தரிசனமே ஜபத பங்கள்.
திடஞானி தரிசனமே செயும றங்கள்.
திடஞானி தரிசனமே சிவத்தைக் காணல்.
திடஞானி தரிசனமே சிவத்தின் சேவை.

திடஞானி தரிசனமே மேவு தற்குத்
திரிவிதமா முலகத்தும் அரிதாம் யார்க்கும்

என்றறிபு கீதையின் திருவாக்குகளே வடிவமாக ஸ்ரீ ஞானானந்தரின் ஸ்ரீ மூர்த்தி பிரகாசித்துத் தன் ஸந்நிதானத்தை நாடுபவர்களுக்குக் கல்ப விருக்ஷம், காமதேனு, சிந்தாமணிகளாய் விளங்கி அருள் பாலிக்கிறதென்பது இந்தத் தபோவனத்திற்கு விஜயம் செய்யும் பேறு பெற்ற புண்ணிய சாலிகள் ஒவ்வொருவருடைய சொந்த அனுபவமாகுமென்பது அதிசயோக்தியாகாது. இம்மகா புருஷனுடைய மகத்தான உபதேச ரத்னங்களை அவ்வப்போது கிடைக்கும் அவ்வளவையும் திரட்டி வெளியிட்டு, உலகிற்கு உறுதி பயக்கவேண்டுமென்றே இந்த "**ஞான ஒளி**" இத் தபோ வனத்திலிருந்து ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளின் பரிபூர்ண ஆசிகளைப் பெற்றுப் பக்த ரத்னங்களின் பிரார்த்தனைக்கிணங்கி வெளி வருகிறது.

ஸரயு நதியின் முதல் சூழ்ச்சி

ஸ்ரீ S. நாராயண அய்யர்,
அட்வகேட், திருக்கோவலூர்.

★

வேதங்களின் லக்ஷியார்த்தத்தை விளக்கும் பொருட்டு ஆச்சாரியவர்யாளான ஸ்ரீ சங்கர பகவத்பாதாளால் ஆறு சமயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவை காணபத்யம், கௌமாரம், ஸௌரம், சாக்தம், சைவம், வைஷ்ணவம் என்று கூறப்படுகின்றன அந்தந்த சமயத்தவர்களும், அந்தந்த சமயத்தில் கூறப்படும் தெய்வத்தை வழிபடுகின்றனர். ஆனால் ஒரு கடவுளே ஆறு சமயங்களிலும் வேறு வேறாகக் காட்சி அளிக்கின்றாரென்றும் வேதங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.

எல்லா சமயத்தினரும் இந்த அடிப்படைக் கருத்தை மறந்தனர் அதோடு இல்லாமல் ஒவ்வொருவரும் தன்

தெய்வம்தான் பெரியது என்று மற்ற சமயத்தினரோடு வழக்கிடத் தொடங்கினர்.

இதைச் கண்ட ஸரயு நதி வேதக் கருத்தை விளக்கிக் காட்ட ஒரு சூழ்ச்சி செய்தது. இந்த நதி ஹிமய மலையில் மானஸ ஸரோவரத்தில் தோன்றி கடலொடு கலக்குமுன், தன்னுள் பல துறைகளை ஏற்படுத்திக் கொண்டது. மக்கள் அவரவர்கள் சௌகரியத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு துறைகளின் வழியே சென்று தங்கள் நீர் வேட்கையைத் தணித்துக்கொண்டனர். அவரவரும் அவரவர் சென்ற துறையில் உள்ள நீரே உயர்ந்ததென்று எண்ணினர். பிறகு எல்லாத் துறைகளிலும் ஒரே ஸரயு நதி நீர்தான் உள்ளது என்று உணர்ந்தனர்.

ஸரயுவின் சூழ்ச்சியால் மக்களுக்கு அறிவு பிறந்தது. ஆறு சமயங்களிலும் வேறுவேருக ஒரே கடவுள் தான் விளை யாடுகிறுர் என்று உணர்ந்தனர்.

அந்த ஒரே கடவுளை ஆறு சமயத்தினரும் ஆறு வித மாக உபாஸிக்கின்றனர் என்று அறிந்தபின் அவர்களுக் குள் நேர்ந்த வழக்கும் தீர்ந்தது. ஸரயுவின் சூழ்ச்சிதான் என்னே !

“ கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்
தொலலையில் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே”

— கம்பராமாயணம்

குடிமயக்கம் தலைக்கேறிய ஒருவனை ஒரு குவளை அரிசி யைக் கழுவிய கழுநீரைக் குடிக்கச்செய்தால் அவன் உடனே மயக்கம் தெளியப்பெறுகிறுன். அதுபோல் உடற்பற்று, உலகப்பற்று, உடைமைப்பற்றுள்ள வர்கள் திடஞானியின் சேர்க்கையால் உடல் மயக்கம் உலக மயக்கம் நீங்கி மெய்யுணர்வு பெறுகின்றனர்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட உறுதிப்பொருள்

(நான்கு புருஷார்த்தங்கள்)

○●○

மயிலம் பொம்மபுரம் ஆதீன வித்வான்
சி. நடனசபாபதி ஐயர்,
திருக்கோவலூர் கழக உயர்நிலை ஆண் பள்ளித் தமிழ்ப் பேராசிரியர்.

பொருள், காரணப்பொருள், காரியப்பொருள், காரண காரியப்பொருள் என மூன்று வகைப்படும்.

1. **காரணப்பொருளாவது,** தோற்றம் ஒடுக்கமில்லாதது. அவயவப் பகுப்பு இல்லாதது. எட்டியுஞ் சுட்டியும் அறியப்படாதது. முழுவொளியும், முழு நினைவும், முழு இன்பமும், முழு அறிவும் இயல்பாகவுள்ளது. பெயர் வடிவம் இல்லாதது. ஒன்றாய், உடனாய், வேறாயிருப்பது. அறிவால் அறியப்படுவது ஆகிய இவையமைந்த பொருளே காரணப்பொருளாகும்.

2. **காரியப்பொருளாவது,** தோற்றம் ஒடுக்கமுடையது. அவயவப் பகுப்புடையது. எட்டியுஞ் சுட்டியும் அறியப்படுவது. முழு இருளும். முழு மறதியும். முழு துன்பமும், முழு அறியாமையும் இயல்பாகவுள்ளது. பெயரும் வடிவமும் உடையது. பொறியாலும் அறிவாலும் அறியுந்தன்மையது. காரணப்பொருளால் இயக்க இயங்குவது. ஆகிய இவை அமைந்த பொருளே காரியப்பொருளாகும்.

3. **காரணகாரியப்பொருளாவது.** இது காரணப் பொருளை நோக்கக் காரியப்பொருளாகவும். காரியப் பொருளை நோக்கக் காரணப்பொருளாகவும் நின்று காரண காரியம் விரவியதால் அப்பெயர் பெற்றது. எட்டியும் சுட்டியும் அறியப்பட்டதாயும் படாததாயும் உள்ளது. தோற்றம் பெற்று ஒடுக்கமில்லாததாயும் ஒடுக்கம்பெற்று தோற்றமில்லாததாயும் இவ்விரண்டும் பெற்றும் பெறுதும்

இருப்பது. குறைந்த ஒளியும் இருளும் குறைந்த நினைவும் மறதியும் குறைந்த இன்பமும் துன்பமும் குறைந்த அறிவும் அறியாமையும் பெற்றிருப்பது. பெயர் வடிவம் இடையில் பெற்றும் நீங்கியுமிருப்பது. அவயவப் பகுப்புப் பெற்றும் பெருதுமிருப்பது. ஆகிய இவை யமைந்த பொருளே காரண காரியப் பொருளாகும்.

இங்ஙனம் வகுத்துக் கூறிய முப்பொருள்களையும் முறையே 'இறை' என்றும் 'உலகு' அல்லது 'மாயை' என்றும் 'உயிர்' என்றும் ஆன்றோர் அறைவர்.

ஈண்டு இம்முப் பொருளையும் தனித் தனி சிறிது தெள்ளிதின் ஆராய்ந்து பயன் எய்துவதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

1. இறை பரப்பிரம்மமாய் மனம் வாக்குக் காயங்கட்கு எட்டாததாய் அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய் முக்குண ரகிதமாய் இருக்கும் பரம்பொருள் ஓர் நினைவு மாத்திரையில் உயிர்களை அநாதி காலமாகப் பற்றியிருக்கின்ற வினையின் காரணமாய்ப் பலகால் பிறந்தும் இறந்தும் உழன்ற சோர்வைப் போக்குதற்குப் பிரளயத்தை (ஒடுக்கம்) உண்டுபண்ணி, தனு கரண புவன போகங்களாகிய விகாரங்களை அவிகார மாகிய மாயையில் அடக்கிவிடும். மற்றோர் நினைவில் தன்னோடு நீக்கமற நிறைந்திருக்கின்ற சர்வ வல்லமை என்கின்ற பரா சக்தியின் துணைகொண்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்னும் ஐந்தொழிலும், இவ்வைந்தொழிற்குத் தாமே தலைநின்றும் பராசக்தியின் பிரிவாகிய இச்சாசக்தி கிரியா சக்தி, ஞான சக்தி என்னும் முச்சக்தியின் துணை கொண்டும் மாயையில் அடங்கிக்கிடக்கின்ற உயிரை எழுப் பித்தனுகரண புவன போகங்களைக் கொடுத்துத் தொழிற் படுத்தும் என்க.

2. உலகு அல்லது மாயை ஓசைக் குணமுடையதும் பரந்து விரிந்து அகன்று இருக்கின்ற வெட்ட வெளியானதும் ஆன ஆகாசமும், அவ்வாகாசத்திற் றோன்றிப் பரிச குணமுடையதும் மிக்க வலிமையுடையதும் ஆன காற்றும் அக்காற்றி னிடத்தே

தோன்றி ஒளிக்குண முடையதும் ஆன தீயும் அத்தீயிற் ரோன்றி ரச குணமுடையதும் ஆன நீரும் அந்நீரிற்ரோன்றி உவர்ப்பு, துவர்ப்பு உரப்பு. புளிப்பு. கசப்பு, இனிப்பு ஆகிய அறுசுவைக் குணமுடையதுமான மண்ணும் ஆக இவ்வைந்து பூதங்களும் உயிர். தொழிற்படற்கு முதற் கருவியாகவும் துணைக் கருவியாகவும் நிற்கும் என்க.

3. உயிர் தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பன. விலங்கு, மக்கள், தேவர் என எழுவகையாகவும் இவற்றுள் தாவரம் இருபது நூருயிரம், நீர்வாழ்வன பத்து நூருயிரம். ஊர்வன பதினொன்று நூருயிரம். பறப்பன பத்து நூருயிரம், விலங்கு பத்து நூருயிரம். மக்கள் ஒன்பது நூருயிரம். தேவர் பதினைந்து நூருயிரம் ஆக எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேத விரிவாகவும் விளங்குகின்ற உயிர்கள் அறிவுடைய இறையைச் சாரும் போது அறிவும் அறியாமையுடைய உலகத்தைச் சாரும் போது அறியாமையையும் பெற்ற கலப்புப் பொருளாய் நின்று தம்மை அநாதிகாலந்தொட்டுப் பற்றி யிருக்கின்ற வினையின் பயனைக் கிடைத்த தனு கரண புவன போகங்களைக்கொண்டு தொழிற்பட்டு அத்தொழிலால் ஆம்பயனை அப்பிறவியிலும் தொடர்ந்துவரும் மறு பிறவிகளிலும் அனுபவிக்கின்றன என்க. [தொடரும்]

சிவவிஷ்ணு அபேதம்

சிவவிஷ்ணு சர்ச்சைகளெல்லாம் பிற்காலத்தில் எழுந்தவைகள். உபநிஷதங்களில் இவ்விதப் பாகுபாடுகள் எதுவும் விவரிக்கப்படவில்லை. மாண்டூக்ய உபநிஷத்தில் ஓர் இடத்தில் மாத்திரம் சிவன் என்னும் சொல்லேயும், கடோபநிஷத்தில் ஓர் இடத்தில் விஷ்ணு என்னும் சொல்லேயும் காண்கிறோம் அவ்விரு சொற்களுக்கும் மங்களம் என்னும் பொருளே பொருந்தும் ஆகையால் பக்தர்கள் யாவரும் சிவவிஷ்ணு அபேதத்திற்குச் சாக்ஷியாக விளங்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளை என்றும் வணங்கி அவரது அருளுக்குப் பாத்திரர்களாக வேண்டும்.

ஸத்குரு ஞானனந்தர் துதி

ராகம் : **கேதாரகௌளம்]** *[தாளம் :* **ஆதி**

பல்லவி

நானெனும் ஒன்றே தானே இன்பங்களும்
நல்லறிவுணர் வுயிர்பேரும் உருவுங்கொளும் (நான்)

அநுபல்லவி

ஞானனந்த ரஹஸ்யமும் மௌனம் — நிர்
வாணம்அதன் கலன் பாலனின் சின்னம் (நா)

சரணங்கள்

1. கோலங்கள் பூட்டினும் குற்றங்கள் போமோ
ஓலமே யிட்டாலும் உண்மைதான் புதையுமோ
காலமும் வீணே கழிந்திடா வண்ணமுமே
ஜாலமும் விடுத்தே க்ஷணத்துறுதி கொள்ளுகின்ற (நா)

2. பாரினில் கந்தமும் பானத்தில் ரஸமும்
பரிதி மதிமீன் மின்னிற் றீயினில் ஒளியும்
காற்றினி லசைவும் வானிலொலியும் — ஜீவ
புரியினிற் புருஷனும் புருஷோத்தமனும் (நா)

3. பரவெளியிற் கருணை மனவெளியில் நற்கொள்கை
பூத வெளியிடங்கொள் பற்பல பேதங்களும்
உறுதுணைகள் எனவே உட்கருத்தினிற் கொண்டால்
மறுபிறப்பில்லை மற்றொன்றுந் தானில்லை என்றும்(நா)

4. சிந்தனைகளில் எழும் ஜீவர் வேதனைகள் — சிவ
சிந்தனை யாலேயேதான் சிதைவுறும் என்பதுவும்
முந்தை வினையகல முறைநெறி பதிதுதி
சொந்தமென் றுறவுடன் ஸுகித்திட வைக்கும்பொருள்
(நா)

5. தவத்திற்ற் செல்வமும் குணத்தினுல் மேன்மையும்
த்யாகத்திற் பெருமையும் தாழ்மையில் கவுரவமும்
சிவத்தின் வழிபாடின்றி சித்திப்ப தரிதுண்மை
திடத்துடன் நடத்தையில் திருந்தவேணு மென்றும் (நா)

6. அரன்செயல் எனக்கொள்ளின் அகந்தை முன்னகலும்
அன்புவெள்ளம் பெருகும் ஆற்றலும் வாய்க்கும்
புறத்துளதும் துணையாம் புன்மை சினங்கள் நீங்கும்
சிறப்புறச் செல்வம்பல செழித்திடவுஞ் செய்யும் (நா)

7. தந்தையுந் தாயுமாம் தேவனும் தேவியும்
மந்திரங்கள் சொன்னல் மனத்துயரங்கள் போகும்
வந்தனை செய்திடச்சீர் வடிவங்கள் பலவுண்டு
நிந்தனைகள் நின்றலே நிமலன்அருள் உண்டென்றும்
(நா)

8. கற்பகன் கணபதி பரிதிஅரன் அயன்மால்
ஸ்வப்ரகாசச் செல்வன் தற்பரன் ஸுப்ரஹ்மண்யோம்
பற்பல லீலையால் முற்படும் அருள்வழி
சிற்பர வெளியிடைச் செலுத்தும் ஞானனந்தம் (நா)

★

யமஸ்ய காமஸ்யச தாரதம்யம் விசார்யமாணே ஹதஸ்தி லோகே, ஹிதம் கரோத்யஸ்ய யமோ ப்ரிய:ஸன் காமஸ்த்வனர்த்தம் குருதே ப்ரியஸ்ஸன்.

இதன் பொருள் : விசாரித்துப் பார்த்தால் கூற்றுவனுக்கும் காமனுக்கும் விசேஷ தாரதம்மியமிருக்கிறது. வேண்டாதவன்போலிருந்துகொண்டு கூற்றுவன் ஹிதத்தைச் செய்கிறன். வேண்டியவன்போலிருந்து கொண்டு காமன் அனர்த்தத்தைச் செய்கிறன்.

— ஸ்ரீ சங்கர பகவத் பாதாள்

குருதேவரின் பத்து அணிகள்

தி. சு. கலியாண ராமன், **விருத்தாசலம்.**

பெயர்
செல்வப் பசுங்கிளியே! தென்பெண்ணைச் சீர் உலவு
நல்வளத்தான் **நாமம்** நயந்துரையாய்—சொல்வேன் கேள்
வானுடர் மண்ணகத்தார் வந்துபணி யும் பதத்தான்
ஞானனந் தப் பெயரான் நாடு !

நாடு
அஞ்சுகமே! என்ஞான ஆனந்தன் தங்குவதால்
விஞ்சுபுகழ் கொள்**நாடு** விண்டிடுவாய்—சஞ்சலமே
தான்அறியா ஞானியவன் தங்கும் நடுநாடே
வான்அறியா மேன்மைபெறும் வந்து !

நகரம்
பச்சை மணிக்கிள்ளாய் ! பரமானந் தம் துய்ப்போன்
இச்சைக்(கு) இனிய**நகர்** ஏதுரையாய்—மெய்ச்சீலன்
வாழும் நகரங்கள் வான் சித்தி லிங்கமடம்
சூழும் தவவனமாம் சொல் !

ஆறு
வண்ணப் பசுங்கிளியே! வானமுதம் தானுண்ணும்
அண்ணல் தனக்கினியே **ஆறு**ரையாய்—விண்ணவர்கள்
நண்ணிமுழு கும்கங்கை நம்பாவம் தீர்க்கும்தென்
பெண்ணையெனும் பேராறே பேசு !

மலை
பவளவாய்க் கிள்ளாய்! பரம்பொருளான் போற்றும்
தவள**கிரி** தானெதுநீ சாற்றுய்—சிவபெருமான்
உண்ணு முலையாளோ(டு) ஓங்கும் திருமலையாம்
அண்ணு மலையென்(று) அறி !

வாகனம்
வாராய் மணிக்கிளியே! மாமுனிவன் ஊருகின்ற
சீராரும் **வாகனம்**நீ செப்பிடுவாய்—தீராத
காலமெனும் தேவன் கனகமுடித் தலையே
சீலனிவன் வாகனமாம் தேர்.

படை
தேன்போல் மொழிபேசும் சிங்காரப் பைங்கிளியே!
வான்போற்றும் ஞானி**படை** வாழ்த்திஉரை—நான்பணியும்
மோனி தனிப்படையோ மூவுலகும் வெல்லவல்ல
ஞானப் பெரும்படையே நாட்டு !

முரசு
அமுத மொழிக் கிளியே! ஆனந்த ஞானி
தமது **முரச**மெது சாற்று—நமதான்ம
நாதன் புகழ்முரசம் நல்லதவம் நற்றரும
போதமுடன் வீடெனவே போற்று.

மாலை
மேருமகள் கையுறையும் மென்கிளியே! வேதமுனி
சீருலவு **மாலை**யெது செப்பிடுவாய்—தேரிலந்த
சூரியனுர் விண்மீன்கள் தூயமதி தாம்மலராம்
தாரணிந்தான் தாணுஅவன் தான் !

கொடி
செம்பவள வாய்க்கிளியே! தேசன் ஞா னனந்தன்
எம்பெருமான் **பொன்கொடி**நீ யாதுரையாய்—அம்புவியில்
போகக் கொடியடங்கப் பொய்யொழித்து மெய்வளர்க்கும்
யோகக் கொடியதுவே ஓம் !

The Light Divine

—:—

An Anglc-Tamil Quarterly Journal solely devoted to the dessimination of spiritual knowledge, published by the Devotees of H. H. Sri Swami Gnanananda Giri Maharaj of Gnanananda Tapovanam, Tirukkovalur Taluk, South Arcot District.

Editor & Publisher:

Swami Mukundananda

Editorial Board:

Sri V. G. Ramachandra Ayyar, *M. A., B. L.,*
Advocate, Tirukkovalur.

Sri S. Narayana Ayyar, *B. A., B. L.,*
Advocate, Tirukkovalur.

Sri Venkatasubba Ayyar,
Retired Inspector (Co-Op. Dept)
Kiloyur.

Annual Subscription : Rs. 4-00

Single Copy : Rs. 1-25

Apply to

Sri Swami Gayatriananda,
Manager, "The Light Divine"
Sri Gnanananda Tapovanam,
Arakandanallur P. O.,
Tirukkovalur Tk., S. A. Dt.

ஆசிரியர்கள் ஆற்றல்பெற

தாங்கள் கற்ற வித்தையை உபயோகித்துக்கொண்டு அதை ஒரு ஜீவனத்திற்கு வழியாகத் தேடிக்கொள்பவர்கள் உபாத்தியாயர்கள். மற்றவர்கள் எல்லோரும் படிப்பு முடிவுபெற்றதும் வேறு வேடம் போட்டுக்கொண்டு படிப்புக்குச் சம்பந்தமில்லாத தொழில்களில் ஈடுபட்டுவருகிருர்கள். தாங்கள் கற்பிக்கப்போவதை உபாத்தியாயர்கள் முன்னரே ஆராய்ந்துகொண்டால்தான் மாணவர்களின் மனதில் பதியும்படி போதிக்கக்கூடிய சக்தி அவர்களுக்கு உண்டாகும். ஒரு வித்வான் ஒரு அரசனிடம் சென்று பாகவதம் சொல்வதாகக் கூறினர். அந்த அரசன் அவரைப் பார்த்து, மற்றொரு முறை பாகவதத்தைப் படித்து வரும்படி சொல்லி அவரைத் திருப்பி அனுப்பிவிட்டான். மறுபடியும் அவர் வந்தபொழுதும் மறுபடியும் படித்துவாரும் எனக் கூறினன். இவ்விதம் 21 முறை அரசன் அவரைத் திருப்பியனுப்பிவிட்டான். 21 முறை பாகவதம் வாசித்த அந்த வித்வான் பாகவதத்தின் உட்பொருளை நன்ருக உணர்ந்து ஆத்மஞானத்தை அடையும்பொருட்டு காட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் காட்டுக்குச் சென்றுவிட்டதையறிந்து அந்த அரசன் தனக்கு உபதேசம்செய்ய அவர் அப்பொழுதுதான் பக்குவமடைந்தார் என்பதை உணர்ந்து அவரைக் காட்டில் தேடிச்சென்று தனக்கு உபதேசம் செய்யும்படி கேட்டுக்கொண்டான். அதுபோல, பல முறை படிக்கப் படிக்கத்தான் விஷயத்தின் உட்கருத்து வெளிப்படும். அப்பொழுதுதான் உபாத்தியாயர்கள் கல்வி போதிக்கத் தகுதியுள்ளவர்களாகயிருப்பார்கள். பழைய காலத்து ரிஷிகள்போல அவர்கள் வாழ்ந்து சிஷ்யர்களை நல்ல மார்க்கத்தில் பயில்விக்கவேண்டும்.

— ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

Edited and Published by Swami Muhundananda at Sri Gnanananda Tapovanam, Arakandanallur P. O., and Printed at Sri Murugan (Power) Press, Vriddhachalam.